# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 10

# மூன்றாம் வேற்றுமை

K.Nadarajah,
Tamil Trd, BA, MA,
PGDE, PGDSNE, MEd,
Teacher, N/Cambridge College

# மூன்றாம் வேற்றுமை

- உருபு- ஆல், (ஆன்) (ஒடு) ஓடு என்பனவாகும்.

- குறிப்பு

  தற்காலத் தமிழில் ஆன், ஒடு ஆகிய உருபுகள் பயின்றுவருவதில்லை என்பதை மனதில் இறுத்திக்கொள்ள வேண்டும்.

## பொருள்

கருவி, கர்த்தா, உடநிகழ்ச்சி ஆகிய பொருள்களில் வரும் என்பது அடிப்படை ஆனால் தற்காலத் தமிழில் காரணப் பொருள், மூலப்பொருள், அடைமொழிப்பொருள், கலப்புப்பொருள், கூட்டல் அல்லது சேர்த்தல்பொருள், ஓர் இடத்தில் தொடர்ந்திருத்தல் பொருள், வரையறைப்பொருள், வினையடை ஆக்கிபொருள் என்பதாக பயின்றுவரும்.

இதற்கான உதாரணங்களைப் பார்ப்போம்.

## கருவிப் பொருள்

- ❖ கத்தியால் வெட்டினான்.
- ❖ பேனையால் எழுதினான்.
- ❖ துடைப்பத்தால் துடைத்தாள்.

இங்கு ஆல் உருபு கருவிப்பொருளை உணர்த்தி நிற்கின்றது.

## கர்த்தாபொருள்

- குயில்பாட்டு பாரதியால் எழுதப்பட்டது.
- திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.
- இந்தவேலைதம்பியால் முடிக்கப்பட்டது.

இங்கு ஆல் உருபு கர்த்தா பொருளை உணர்த்துகின்றது.

# காரணப்பொருள்

- உழைப்பால் உயர்ந்தான்.
- கவலையால் வாடினான்.
- நோயினால் இறந்தான்.
- மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தான்.
- பொதுமுடக்கத்தால் வீட்டிலிருந்தான்.

இங்கு உழைப்பு, கவலை, நோய், மகிழ்ச்சி, முடக்கம் என்னும் பெயர்ச் சொற்கள் ஆல் உருபு ஏற்று உயர்தல், வாடுதல், இறத்தல், குதித்தல், முடங்குதல் என்ற வினைகளுக்கான காரணத்தை உணர்த்துகின்றன. எனவே ஆல் உருபு காரணப்பொருளை உணர்த்துகின்றது.

## மூலப்பொருள்

- தங்கத்தால் செய்தகாப்பு
- பலகையால் செய்த மேசை
- நூலினால் நெய்த ஆடை
- மண்ணால் கட்டியவீடு
- மணலால் செய்தசிற்பம்

மேற்சொன்ன வாக்கியங்களை அவதானித்தால் புலப்படும் உண்மையாதெனில் ஆல் உருபு மூலப்பொருளில் வருகின்றது. எனவே இதனை தொகுத்து நோக்கும் போது ஆல் உருபுகருவி, கர்த்தா, காரணம், மூலப்பொருள் ஆகியவற்றில் வருவதை காணலாம். தற்காலத் தமிழில் ஆல் உருபுக்கு பதிலாக கொண்டு என்ற சொல்லுருபு பயன்படுவதைக் காணலாம்.

உ-ம் :- கத்தி கொண்டு வெட்டினான்.

# உடநிகழ்ச்சிப் பொருள்

- தம்பி அப்பாவோடு(ஓடு) கடைக்குச் சென்றான்.
- கமலா தங்கையோடு(ஓடு) விளையாடினாள்.
- குடும்பத்தோடு(ஓடு) கோவிலுக்கு செல்வது மிக நல்லது.
- இங்கு ஓடு என்ற உருபு உடநகழ்ச்சி பொருளில் வந்துள்ளதனைக் காணலாம்.

ஆனால் ஓடு என்ற உருபுக்கு பதிலாக உடன் என்ற உருபு தற்காலத்தமிழில் பயின்று வருவதனையும் உதாரணமாக கொள்ளலாம்.

- இது உடன்நிகழ்ச்சி பொருளில் மட்டுமன்றி ஏனைய பொருள்களில் வருவதற்கு உதாரணங்களை பார்ப்போம்.

## அடைமொழிப் பொருள்

- அன்போடு பேசினார்.
- மகிழ்ச்சியோடு பாடினார்.
- கோபத்தோடு பார்த்தார்.
- கனிவோடு கதைத்தார்.
- விரக்த்தியோடு வீட்டிலிருந்தார்.

இங்கு தரப்பட்ட வாக்கியங்களில் ஓடு என்ற உருபுஏற்ற பொயர்ச் சொற்கள் வினைச் சொல்லுக்கு அடைமொழியாக வருவதனால் இதனை அடைமொழிப்பொருள் என்கின்றோம்.

# கலப்புபொருள்

- கல்லோடு மண்ணைக் கலந்தான்.
- பாலோடு தண்ணீரைக் கலந்தான்.
- பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்.
- சோற்றோடு மரக்கறிகளை கலந்து உண்பது நல்லது.
- தேனீரை இஞ்சியுடன் கலந்து குடிப்பது நல்லது.

இங்கு ஓடு என்ற உருபேற்றசொல் பிரிதொன்றுடன் கலப்பதனாலே இதனை கலப்புப்பொருள் என்கின்றோம்.

## கூட்டல் அல்லதுசேர்த்தல் பொருள்

- மூன்றோடு மூன்றைக் கூட்டினால் ஆறு.
- பத்தோடு ஒன்றைக்கூட்டு.
- வெண்ணீரோடு தேனை சேர்த்தான்.
- அவனோடு சேர்ந்து வாழ்வதே நல்லது.
- இன்றோடு பத்து நாளாகின்றது.

இங்கு ஓடு என்ற உருபுஏற்றசொல் ஒன்றோடு இன்னுமொன்றை சேர்த்தல் பொருளில் வருவதனை அவதானிக்கலாம்.

# ஓர் இடத்தில் தொடர்ந்திருத்தல் பொருள்

- அப்பா வீட்டோடு தங்கிவிட்டார்.
- இந்த சூழ்நிலையில் வீட்டோடு இருந்து படிப்பதுதான் நல்லது.

இங்கு ஓடு ஏற்றசொல் ஓரிடத்தில் தொடர்ந்திருப்பதைக் குறிக்கின்றது.

# வரையறைப் பொருள்

- இந்த மாதத்தோடு ஓய்வு பெறுகின்றார்.
- உனது ஆட்டத்தை இத்தோடு நிறுத்திக்கொள்.
- காலை உணவை பாலோடு நிறுத்திக்கொள்வோரும் உளர்.

இவ்வாக்கியங்களில் ஓடு என்ற உருபேற்றசொல் வரையறைப் பொருளை உணர்த்துகின்றது.

## வினையடை ஆக்கிப் பொருள்

- மக்களோடு மக்களாக.
- இரவோடு இரவாக.
- காற்றோடு காற்றாக.
- சூட்டோடு சூடாக பருக வேண்டும்.

இங்கு ஒரே பெயர்கள் இரட்டித்து வருகின்றது. அவ்வாறுவரும் போது முதற் பெயருடன் ஓடு என்ற உருபு இணைந்து வெவ்வேறு வினையடைப் பொருள்களைத் தருகின்றன. இதனையே வினையடையாக்கி என்கின்றோம்.

# நான்காம் வேற்றுமை

உருபு - கு இவ்வுருபானதுக்கு, அக்கு, உக்கு ஆகிய மாற்று வடிவங்கள் உண்டு.

**பொருள்**

கொடை - ஏழைக்கு உணவு கொடைத்தான்.

பகை - கீரிக்கு பாம்பு பகை.

நட்பு - குகனுக்கு இராமன் நண்பன்.

தகுதி - தந்தைக்கு தகுதி குடும்பத்தை காப்பது.

முதற்காரணம்

அம்மா தோசைக்கு மாவை பிசைந்தாள்.

நிமித்தக்காரணம்

கடவுள் பிட்டுக்கு மண் சுமந்தார்.

உறவு

நிமலனுக்கு ராம் மாமன்.

இவ்வாறு அடிப்படையான பொருள்களை உணர்த்துவதாக இலக்கணம் கூறுகின்றது.

இவை மட்டுமன்றி இன்னும் வேறு பொருள்களை உணர்த்துவதாக மொழி ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவை பின்வறுமாரு :

**எல்லைப்பொருள்**

இலங்கைக்கு வடக்கே இந்தியா உள்ளது.

**ஓர் இடம் நோக்கி நகர்தல் பொருள்**

நான் வீட்டிற்கு போய்க் கொண்டிருக்கின்றேன்.

அனுபவப்பேறு என்ற பொருள்

இவருக்கு சேவையில் நல்ல அனுபவம் உண்டு.

காலக்குறிப்பு என்னும் பொருள்

இரண்டு மணிக்குவகுப்பு இருப்பதாகஆசிரியர் சொன்னார்.

வீதம்,விகிதாசாரம் என்றபொருள்

இலங்கையில் நூற்றுக்குதொன்னூறு பேர் குணமடைந்துள்ளனர்.

## வினையடையாக்கி என்னும் பொருள்

### ஆளுக்கு ஆள் வேறுபாடு உண்டு

தற்காலத் தமிழில் நான்காம் வேற்றுமை உருபுக்கு பதிலாக பொருட்டு, நிமித்தம், ஆக முதலியன சொல்லுருபுகளாக வருவதனைக் காணலாம்.

**உ-ம் பொருட்டு**

தொற்றுநோயின் பொருட்டு பயணத்தடை விதிக்கப்பட்டது.

**நிமித்தம்**

முக்கியவேலையின் நிமித்தம் இங்கு வந்திருக்கின்றேன்.

**ஆக**

அம்மா குழந்தைக்காக பால் வாங்கினாள்.

நான்காம் வேற்றுமையை கொடைப்பொருள் வேற்றுமை என்று அழைப்பர்.